பக்கங்கள்: 13
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 22 சனிக்கிழமை 07.11.2020 கதிர் 02

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை எண்ணிப் பெருமைப்படலாம்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சர்கள் பட்டாள மாநாட்டில் பல ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் காணவில்லை. பக்கம் 02

ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில்

## 20 சிறுவர்கள், 12 தாய்மார் கொரோனாவால் பாதிப்பு

கொழும்பு – பொரளையில் உள்ள சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரை 20 சிறுவர்கள் மற்றும் 12 தாய்மார்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலைப் பணிப்பாளர் ஜி.விஜேசூரியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வைத்தியசாலையில் பக்கம் 02

## கொரோனா சாவு 30ஆக அதிகரிப்பு

மோதரை இளைஞர் பலி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பு 15, மோதரையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் நேற்று மரணமடைந்துள்ளார். பக்கம் 02

## 4 மகள்களுக்கும் நஞ்சு கொடுத்து தானும் அருந்திய கொடூரத் தாய்

மூத்தவள் பலி; ஏனையோர் வைத்தியசாலையில்

தாய் ஒருவர் தனது நான்கு மகள்களுக்கும் நஞ்சு கொடுத்து தானும் நஞ்சு உட்கொண்ட சம்பவம் திருகோணமலையில் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 16 வயது விதுசிகா என்கின்ற மாணவி உயிரிழந்தமையுடன் ஏனைய மகள்மாரான 12 வயது வைஸ்வரி, 8 வயது ஜஸ்வரி, 2 வயது கதிரியா ஆகியோருடன் அவர்களது 31 பக்கம் 02

நேற்றைய யாழ். செயலகக்கூட்டத்தில் பங்கேற்ற

# கோப்பாய் பிரதேச செயலர், தவிசாளரை உடனடியாகத் தனிமைப்படுத்தப் பணிப்பு

ஏனையவர்களின் நிலைமை தெரியவரவில்லை

(ந.லோகதயாளன்)

**தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி – சுகாதார நடைமுறைகளைப் புறந்தள்ளி – கொழும்பிலிருந்து வந்த அமைச்சர்கள், அதிகாரிகள் பட்டாளத்துடன் – யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலாளர் மற்றும் கோப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு கோப்பாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அறிவுரை வழங்கியுள்ளமை தொடர்பில் சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது.** பக்கம் 02

## கல்வி அதிகாரிகள் 12 பேர் விசாரணை வலயத்துக்குள்

(ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர், கணக்காளர், வலயப் பணிப்பாளர் என 12 பேர் கூண்டோடு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை வலயத்தில் உள்ளனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பணியாற்றிய முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மாதாந்த சம்பளப் பணத்தில் 21 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்டமை வெளித்தெரியவந்ததையடுத்து பக்கம் 02

## கொரோனாத் தொற்று: நேற்று 400 பேருக்கு!

இலங்கையில் நேற்றும் 400 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 970 ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 5 ஆயிரத்து 754 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 7 ஆயிரத்து 186 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 30 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

## மானிப்பாயில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், நவ.07

மானிப்பாயில் பலசரக்கு கடை ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக்குக் கும்பல் உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியதுடன் கடையிலுள்ள பொருள்களையும் அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் பக்கம் 02


## அல்வாயில் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களுக்கான அறிவித்தல்

விவரங்களை வழங்குமாறு கேதீஸ்வரன் கோரிக்கை

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள் மற்றும் சிறுவன் ஒருவனுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களின் விவரங்களை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இந்தக் கோரிக்கையை பக்கம் 02

## அமெ.அதிபராக ஜோ பைடன்



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை எண்ணும் பணி பெரும்பாலும் இறுதிக் கட்டத்தை எட்டும் பக்கம் 02

## வவுனியாவில் வர்த்தமானி அறிவித்தலை மீறி அதிக விலைக்கு அரிசி விற்பனை

அரிசிக்கான விலைகள் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்த போதிலும் வவுனியா மாவட்டத்தில் அதிக விலைக்கு அரிசி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளுக்கமைய அவித்த மற்றும் அவிக்காத சிவப்பு மற்றும் வெள்ளை சம்பா அரிசி கிலோ ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 94 ரூபாவாகவும், அவித்த நாட்டரிசி ஒரு கிலோவின் விலை 92 ரூபாவாகவும், வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 89 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு பக்கம் 02

## பொலிஸாரைத் துரத்தும் 'கொரோனா' இதுவரை 358 பேருக்கு தொற்று உறுதி



இலங்கையில் கொரோனா வைரஸ் பொலிஸ் பிரிவுக்குள்ளும் புகுந்து ஆட்டத்தைக் காண்பித்துள்ளது.

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 358 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஒரு நாளில் மட்டும் 85 பொலிஸார் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பக்கம் 02

# வெலிக்கடை சிறையிலும் கொத்தணி! முப்பது பேருக்குக் கொரோனா உறுதி!!

நேற்று மாத்திரம் 23 கைதிகள் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை என இரண்டு பிரதான கொத்தணிகளாக உருவெடுத்து நாட்டின் பல பாகங்களிலும் சிறிய கொத்தணிகளாக வியாபித்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையிலும் ஒரு கொத்தணி உருவாகியுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் 7 பேருக்குத் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றும் 23 கைதிகள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இருந்து வந்த ஊடகவியலாளர்களும், அரசியல் தரப்புகளால் யாழ்ப்பாணத்தில் இயக்கப்படும் ஊடகங்களின் பிரதிநிதிகளின் தலைகளும்தான் தென்பட்டனராம்.

என்ன, ஏது என்று விசாரித்தேன். கொரோனாத் தொற்றை ஒட்டிப் பிரடகனப்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டங்களை உதாசீனப்படுத்தி, புறம் ஒதுக்கி, யாழ்ப்பாணத்துக்குக் கொரோனா வைரஸைக் கொண்டுவந்து இறக்குவதுபோன்ற பாணியில் முன்னெடுக்கப்பட்ட இந்த மாநாட்டின் செய்திகளைப் புறக்கணிப்பதன் மூலம், இப்படி எதேச்சதிகாரமாகக் கூட்டம் நடத்துவதற்கு யாழ்ப்பாண மக்களின் எதிர்ப்பைக் காட்டுவது என்பது அவர்களின் எண்ணம். பாராட்டப்படக் கூடிய புரட்சிதான்.

நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றிய அரசியல்வாதிகளின் ஊடகங்கள் சில இங்கு உள்ளன. அவற்றின் ஊடகவியலாளர்கள் என்ன செய்ய முடியும்? ஒற்றுமையாக ஏனையோருடன் சேர்ந்து முடிவெடுத்து எதிர்ப்புக் காட்ட முடியாத இக்கட்டு அந்த ஊடகவியலாளர்களுக்கு. அதைப் புரிந்து கொண்டு அவர்களை மதிப்போம். கூட்டச்செய்திகளை அடியோடு புறக்கணிப்பது என்று முடிவு எடுத்த ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களை மரியாதை செய்வோம்.

இந்தக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு அது நடைபெறும் யாழ்.மாவட்டத்தின் அரச அதிபருக்குரியது.

பாவம் மனிஷன். விடயம் தெரியாதவரா அல்லது விடயம் தெரியாதவராக செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டாரா என்பது தெரியவில்லை. அரச உயர் அலுவலர்கள் தொடர்பில் ஓர் ஒழுங்கு நெறிமுறை (Protocol) உண்டு. அரச சேவையில் இருக்கும் யாழ். அரச அதிபருக்கு அது நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள் என்று ஒழுங்குமுறை உண்டு. இவர்களுக்கு இடையே பிரதம நீதியரசரோ, உயர்நீதிமன்ற நீதியரசரோ, மாகாண ஆளுநரோ, படைத் தளபதியோ, பொலிஸ் மா அதிபரோ வந்ததால் யாருக்கு முன்னிலைமை, அதற்கான ஒழுங்கு முறை யாது என்பவை பற்றி எல்லாம் அறிந்து – புரிந்து – தெரிந்து – இருப்பது அரச அதிபர் போன்ற ஒருவருக்குக் கட்டாயமானது.

யாழ். அரச அதிபர் அது கூடத் தெரியாத ஒருவரா என்பதுதான் கேள்வி.

நேற்றைய கூட்டத்துக்கு வந்த கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் போன்றோருக்கெல்லாம் பின் வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

மாவட்ட அரச அதிபர், யாழ்.மாவட்ட எம்.பியான அங்கஜன் இராமநாதன் போன்றோருக்கு முதல் வரிசை ஒதுக்கப்பட்டிருந்தது.

Protocol முறைமை யாது என்பதை மிகுந்த அனுபவஸ்தரான யாழ் அரச அதிபர், அமுல் பேபியிடம் கேட்டுப் படித்துச் செயற்படுகின்றார் போலும்.

அது எங்கள் தலையயழுத்து! என்ன செய்வது?

நேற்றைய கூட்டத்துக்கு வந்த பிரமுகர்களுக்கு இங்கு ஐந்து நட்சத்திர விடுதிகள் இரண்டில் மதியச் சாப்பாடு.

இங்குள்ள சாப்பாட்டுக் கடைகளில் கதிரைகளை எல்லாம் அகற்றி, எங்களை எல்லாம் நின்றபடி சாப்பிடக் கட்டாயப்படுத்திய அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், அவர்களின் எடுபிடிகள் ஐந்து நட்சத்திர விடுதியில் நின்று கொண்டு 'கையேந்தி பவன்' சாப்பாடா சாப்பிட்டிருப்பார்கள்? ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அவர்கள் ஒன்று கூடி இருந்து சாப்பிடலாம்.

நாங்கள் சண்முகம் சைவக் கடையில் இருந்து சாப்பிடத்தான் தடை.

இன்னொரு கூத்தும் நடந்தது. அரச அதிபருக்கு அடுத்த நிலையில் பதவியில் இருப்பவர், இந்த நட்சத்திர விடுதி மதிய விருந்துக்கு முறைப்படி தாம் அழைக்கப்படவில்லை என்ற சீற்றத்தில் வீட்டுக்குப் போய்விட்டாராம். பாவம், யாழ் அரச அதிபர். தமக்கு அடுத்த நிலையில் இருப்பவரை தாஜா செய்து தமக்கு முரண்படாமல் வைத்திருக்க அவர் ரொம்பத்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கின்றது.

நேற்றைய யாழ் செயலகக் கூட்டத்தில் இன்னொரு விடயமும் நடந்தது.

மஹிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக்காலத்தில் வடக்கில் பெரிதும் பேசப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டு, அடங்கிப் போயிருந்த 'இரணைமடுத் தண்ணீர்' விவகாரம் நேற்று மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாகப் புது அவதாரம் எடுத்துப் பேசப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏனைய தமிழ் அரசியல்வாதிகளுடன் நெருக்கமாகப் பேசியமையையும், அரசியலில் முரண்பட்டு நிற்கும் சட்டத்தரணிகளான சுமந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பக்கத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்து அந்நியோன்னியமாக உரையாடிக் கொண்டிருந்தமையையும் காண முடிந்தது.

கூட்டத்தில் மேலும் பல நல்ல விடயங்கள் பேசப்பட்டன. ஆனாலும் அந்தக் கூட்டத்தையே பல ஊடக நிறுவனங்கள் பகிஷ்கரித்து சில நியாயப்பாடுகளை முன்வைக்கும் போது அதற்கு மாறாக நான் முந்திரிக் கொட்டை மாதிரி முன்னுக்கு நின்று அதிகப் பிரசங்கத்தனமாக, அக் கூட்டம் பற்றி எழுதுவதும் பொருத்தமற்றது. அதனால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

ஆனாலும், எது, எப்படி என்றாலும் –

ஆலயங்கள், திருமண நிகழ்வுகள், செத்த வீடுகளில் கலந்து கொள்வோருக்குக் கட்டுப்பாடு போட்டு சட்டத்தை நிலை நிறுத்துபவர்கள், அதே சட்டத்தை மீறி – கொழும்பிலிருந்து வந்த பல டசின் கணக்கானோரோடு ஒன்று கூடி – சுமார் 250?பேர் சகிதம் கூட்டம் நடத்தியமை பெரும் குற்றமே. நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே...!

–மின்னல் –

## அல்வாயில் தொற்றுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கரவெட்டியிலுள்ள மனோகரா அல்வாயைச் சேர்ந்த ஒரே குடும்பத்திலுள்ள மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்றுமுன்தினம் மாலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் கரவெட்டி மற்றும் அண்மைய பிரதேசங்களில் பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்வேறு நபர்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர்.

இவர்கள் தொடர்பான விவரங்கள் தெரிந்தவர்கள் அல்லது இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் வடக்கு மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்புக்குரிய 021 222 6666 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு விவரங்களை அறியத் தரவும்.

இவ்விவரங்கள் தொடர்பான இரகசியத்தன்மை இறுக்கமாக பேணப்படும்.

இவர்கள் தொடர்பான விவரங்களை அறிவிப்பதன் மூலம் உங்களுக்குக் கொரோனாத் தொற்று உள்ளதா எனப் பரிசோதித்து அறியவும் உங்களது குடும்பங்களையும் அயலவர்களையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய அவசர சேவைகளை உடனடியாக வழங்குவதற்கும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நோய் எமது மாவட்டத்தில் பரவாதிருக்க அச்சமின்றி சமூகப் பொறுப்புணர்வுடன் உங்களின் தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

## பொலிஸாரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, தொற்று உறுதி செய்யப்பட்ட 358 பொலிஸாரில் 199 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்...)

## 4 மகள்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வயது தாயாராகிய நிசாந்தன் நாகேஸ்வரியும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சி பிரதேசத்தில் இவர்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், கணவர் திருகோணமலை ஆனந்தபுரி பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் கோயில் ஒன்றில் பணியாற்றி வருபவர்.

இந்தநிலையில் உப்புவெளிப் பகுதியில் கோயில் ஒன்றின் நிர்மாணப் பணிகளுக்காக அவர் நீண்டநாள்களாக வீட்டுக்குச் செல்லாமல் தங்கி வேலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக அவரது மனைவி நஞ்சு உட்கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## வெலிக்கடை சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெலிக்கடை சிறைச்சாலையில் இதுவரை 30 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலாக்கியுள்ளனர். அவர்களில் ஒரு சிறைச்சாலை அதிகாரியும், 26 பெண் கைதிகளும், 3 ஆண் கைதிகளும் அடங்குகின்றனர்.

கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட கைதிகள் 29 பேரும் பலத்த பாதுகாப்புடன் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சிறைச்சாலை அதிகாரி கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கோப்பாய் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் 200 பேர் வரையில் கலந்து கொண்ட போதிலும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவின் சுகாதார வைத்திய அதிகாரி மட்டுமே தற்போது இத்தகைய முடிவை எடுத்துப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தநிலையில், கடமை நிமித்தம் ஊட்டத்துக்குச் சென்றமைக்குத் தனிமைப்படுத்தல் உத்தரவு என்பதால் பணியாற்ற அச்சமாகவுள்ளது என ஏனைய உத்தியோகத்தர்கள் அவசரமாக இவ்விடயத்தை மாவட்ட செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

தமக்குத் தனிமைப்படுத்தல் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதேச செயலாளரும் உறுதி செய்துள்ளார். குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏனைய உயர் அதிகாரிகள் தொடர்பிலும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இதேவேளை, நேற்றைய கூட்டத்தின் சர்ச்சை ஓய்வதற்கு முன்பு இதே போன்று நாளையும் மற்றொரு கூட்டம் யாழ். செயலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதால் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அதிகாரிகள் சிலர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்த வழியால் சென்ற இராணுவத்தினர் அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அத்துடன், அக்கும்பல் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் ஒன்றும் அவ்விடத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் நீரிழிவு நோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 சிறுவர்கள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணியாற்றும் மருத்துவர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது எனவும் அவா கூறினார். எனினும், குறித்த மருத்துவர் வைத்தியசாலையில் தொற்றுக்குள்ளாகவில்லை எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொற்றுக்குள்ளாகி உறுதி செய்யப்பட்ட மருத்துவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிய இரண்டு மருத்துவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பணிப்பாளர் ஜி.விஜேசூரியா கூறியுள்ளார்.

இந்தநிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வருவதற்கு அஞ்சத் தேவையில்லை எனவும், மருத்துவ சேவைகள் எந்தவித இடையூறும் இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

சிறுவர்கள் நோயால் பாதிக்கப்பட்டால் அவர்களின் நோய் நிலை மோசமடைவதற்கு முன்னர் வைத்தியசாலைகளை அணுகுமாறும் பணிப்பாளர் ஜி.விஜேசூரியா பொதுமக்களைக் கோரியுள்ளார்.

## வவுனியாவில் வர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த புதன்கிழமை வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தது.

எனினும், வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் அரிசியின் வர்த்தமானி அறிவித்தலை மீறி அதிக விலைகளில் அரிசிகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், அரிசி ஆலைகளும் அதிக விலைகளுக்கே வர்த்தக நிலையங்களுக்கு அரிசிகளை விற்பனை செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் அசமந்தப் போக்காகச் செயற்படுகின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## கல்வி அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்விடயம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதேநேரம் மாகாணப் பிரதம செயலாளர் ஐவர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றையும் நியமித்தார்.

இதையடுத்து மாகாண ரீதியில் விசாரணை இடம்பெறும் அதேநேரம் கொழும்பில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், பணிப்பாளர், கணக்காளர் ஆகியோருடன் வலயத்தின் கல்விப் பணிப்பாளர், கணக்காளர், கணக்குக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் என மொத்தம் 12 பேர் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணைகள் நேற்று முழுநாளும் இடம்பெற்றன.

நேற்று இடம்பெற்ற விசாரணைகள் நிறைவு பெறாத நிலையில் இன்றும் விசாரணை முன்னெடுப்பதற்காக அனைவரும் கொழும்பிலேயே மறிக்கப்பட்டுள்ளனர். இன்றும் விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

இன்றைய விசாரணைகளின் பின்பே இதன் இறுதி நிலைவரங்கள் தெரிய வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெ.அதிபராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாவது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.

எனினும் அவரது தெரிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவது தாமதமாகலாம்.

இதற்கிடையில் நேற்று இரவு (இலங்கை நேரப்படி இன்று அதிகாலை) அமெரிக்க மக்களுக்கு ஜோ பைடன் உரையாற்ற விருந்தார்.

(4ஆம் பக்கத்தில் ஆசிரிய தலையங்கம் பார்க்குக)

# நாட்டை இரு வாரங்கள் முற்றாக முடக்குங்கள்!

## தேசிய விடுதலை மக்கள் முன்னணி கோரிக்கை

கொழும்பு, நவ.07

இலங்கையில் அதி தீவிரமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த நாடு பூராகவும் சுமார் இரண்டு வாரங்களுக்காவது முடக்கி தொற்றாளர் களை அடையாளம் காண அரசும் சம்பந்தப்பட்ட அமைச்சு பொறுப்புடையவர்களும் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் முஸம்மில் மொஹி தீன் நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள் ளவை வருமாறு:-

நாட்டு மக்கள் உயிரோடு வாழ்ந்தால் மட்டுமே ஒவ் வொரு குடும்பமும் சந்தோசமாக உழைத்து வாழ முடியும் அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இதுவரை நாட்டில் பல பாகங்கள் முடக்கப்பட்ட நிலையில் கூட தொற்று பரவலைக் குறைக்க முடியவில்லை. மாறாக அதிகரித்தே காணப் படுகின்றது.

அரசாங்கம் நாட்டை முடக்கி மக்களைக் காப்பாற்ற முயற்சிகள் எடுக்கும் விடயத்தில் கவனம் காட்டுவதில் மந்த நிலையைக் கடைப்பிடிப்பதை காணமுடிகின் றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையில் நாட்டை ஒருபோதும் முடக்க இடமளிக் கமாட்டேன் எனக் கூறுகின்றமை மிகவும் சிந்திக்க வேண்டிய விடயமே!

நாட்டின் ஒரு சில பாகம் முடக்கம் செய்து பரவலை குறைப்பதே கஷ்டமான நிலையில் முழுமையாக முடக் கத்தை நீக்கி எப்படி இதைக் கட்டுப்படுத்துவது என்பது ஒரு கேள்விக்குறியே!

கொவிட் - 19 இற்காகக் கிடைத்த நிதி உதவியையும் உலக வங்கியால் வழங்கிய பண உதவியையும் வைத்து நாட்டு மக்களைப் பாதுகாக்க வழி சமைக்க வேண்டும். மக்களின் வாழ்வாதார நிவாரணங்களை வழங்க நட வடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் மாறாக நிதி யை முடக்கி சமூக முடக்கத்தைத் திறப்பது என்பது கவலைக்குரிய விடயமே!

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தொற்றாளர்கள் பலத்த சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். அத்து டன் மரணமும் அதிகரித்தே வருகின்றது. இவைகளை அறிந்த தொற்றாளர்கள் தனிமைப் படுத்தும் நிலை யங்களுக்குச் செல்வதற்கு மிகவும் தயங்குகின்றனர்.

அரசாங்கம் இன்றைய நாளைய பொருளாதா ரத்தை கவலையாக கொண்டால் எதிர்காலம் முற்றாகப் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

அத்துடன் இப்படி நாளுக்கு நாள் அதிகரிப்பு காரண மாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூட வேண்டிய நிலைப்பாடும் ஏற்படும். ஆகவே நாட்டு கல்வி வளர்ச் சியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்படும் சூழ்நிலை தோன்றும்.

இவைகளை அரசாங்கம் அதி விசேட கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். - என்று உள்ளது.

# வார இறுதியில் பொதுமக்கள் கட்டுப்பாடுகளுடன் நடக்கவும்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

வார இறுதிஎன்பதால்பொதுமக்கள்பயணங்களைக் கட்டுப்படுத்தி கொள்ளுமாறு பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வார இறுதியில் கூட்டங்கள், விளையாட்டு போட்டி கள் என்பன நடத்தப்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமு லில் இல்லாத பகுதி களுக்கும் இது பொருந் தும் என்று அவர் தெரி வித்தார்.

நேற்று வெள்ளிக் கிழமை வார இறுதி தினமாகும். பொது மக்கள் தமது நேரத்தை வீடுகளி லேயே கழிக்குமாறும், கொவிட் தொற்றை தடுப்பதற் கான வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்கு மாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் இதுவரையில் 2 ஆயிரத்து 532 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று காலை 6 மணியுடனான 24 மணித்தி யால காலப்பகுதியில் 139 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர். இது தொடர்பில் 26 வாகனங்கள் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இதுவரையில் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 382 ஆகும்.

முக கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை ஆகியவற்றின் காரணமாக நேற்று முன்தினம் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது வரையில் 96 பேர் இதுதொடர்பாக கைது செய்யப்பட் டுள்ளனர். இவர்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவுக்குச் சிகிச்சையளிப்பதற்காக களுத்துறையில் இரு மத்திய நிலையங்கள்!

களுத்துறை பஸ்துன்ரட கல்வியியல் கல்லூரி மற் றும் அளுத்கம தர்கா நகர் தேசிய கல்வியியல் கல் லூரி ஆகியன கொரானோ தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன என களுத்துறை நாகொட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தமர களுபோவில தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் கொரோனா தொற்றுக் குள்ளாகுபவர்களுக்கு சிகிச்சையளிக்க புதிய இரண்டு மத்திய நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பது தொடர் பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்–

கொரானோ தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக் கும் வகையில் புதிய மத்திய நிலையங்களாக களுத் துறை பஸ்துன்ரட கல்வியியல் கல்லூரி மற்றும் அளுத்கம தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளும் தெரிவுசெய்யப்பட்டு, அவற்றுக்குத் தேவையான சிகிச்சை வசதிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதன் பிரகாரம் பஸ்துன்ரட கல்வியியல் கல்லூரி யில் 400 கட்டில்கள், அளுத்கம தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரியில் 200 கட்டில்கள் உள்ளடங் கிய தேவையான அனைத்து வசதிகளும் செய்து முடிக் கப்பட்டிருக்கின்றன. அங்கு சிகிச்சை அளிப்பதற்காக களுத்துறை நாகொட பொது வைத்தியசாலை, பேரு வளை, அளுத்கம மற்றும் தர்கா நகர் வைத்தியசாலை களின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாற் தொகுதியினர் புதிய சிகிச்சை மத்திய நிலையங்களில் சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன் சிகிச்சை மத்திய நிலையத்துக்கு தேவை யான வசதிகள் மற்றும் பாதுகாப்பு என்பன இராணு வத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய பிபுர, பண்டாரகம, மத்துகம மற்றும் இத்தேபான ஆகிய வைத்தியசாலைகளில் சுமார் 300 கொரானோ தொற் றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அத்துடன் களுத்துறை பொலிஸ் பயிற்சி வித்தியாலயத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான நூற்றுக்கும் அதிக மான பொலிஸார் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றாளர் 563 பேர் குணமடைந்தனர்

நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் 563 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றி லிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 186 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 12 ஆயிரத்து 570 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 5 ஆயிரத்து 355 பேர் வைத்தி யசாலைகளில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் 467 பேர் கொரோனா தொற்று சந் தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 29 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

# 50 செயற்கை சுவாசக் கருவிகள் சிங்கப்பூரால் இலங்கைக்கு உதவி



கொரோனா வைரஸ் தொற் றாளர்களுக்கான சிகிச்சை களை மேலும் வலுப்படுத்து வதற்கு பங்களிப்புச்செய்யும் நோக்கில் 8 கோடி ரூபா பெறு மதியான 50 செயற்கை சுவா சக்கருவிகளை சிங்கப்பூர் நன் கொடையாக இலங்கைக்கு வழங்கியிருக்கிறது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்கு ஆரம்பத்திலி ருந்தே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார் பற்ற நிறுவனங்களும் அமைப்புக்களும் சுகா தார அமைச்சுக்கு பல வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

அந்த வகையில் கொரோனாத் தொற்றா ளர்களுக்கான சிகிச்சை களை மேலும் வலுப்ப டுத்தும் நோக்கில் சிங்கப்பூரின் 'டெம்செக்' நிறுவனத்தால் 8 கோடி ரூபா பெறுமதியான 50 செயற்கை சுவாசக் கருவிகள் சுகாதார அமைச்சிற்கு நன் கொடையாக வழங்கப்பட் டுள்ளன.

இந்த சுவாசக்கருவிகள் ஆஸ்திரேலியாவில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும் என்று தெரிவிக்கப்படுகின் றது.

# வத்தளையில் 68 பேருக்குக் கொரோனா 3 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலில்

வத்தளை - கெரவலப்பிட்டிய பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் மேலும் 68 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் கள் தெரிவித்துள் ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் மேலும் கூறியுள்ளதாவது–

இந்தத் தொழிற்சாலையில் இதற்கு முன் னர் 49 ஊழியர்கள் கொரோனா தொற்றுக் குள்ளாகியமை கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தொழிற்சாலையின் அனைத்து ஊழியர்களிடம் முன்னெடுக் கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் 68 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றுக் குள்ளானவர்களுடன் தொடர்புகளை பேணிய சுமார் 3 ஆயிரம் பேர் சுய தனிமைப் படுத்தலிலும் உள்ளனர்.

அந்தவகையில் குறித்த தொழிற்சா லையில், 117 ஊழியர்களுக்கு இது வரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹோமாகம வைத்தியசாலையின் 5 ஆவது வார்ட் மூடப்பட்டுள்ளது!

ஹோமாகம வைத்தியசாலையின் 5 ஆவது வார்ட்டில், நோயாளர் ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து அந்தப் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவரே கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அந்தப் பகுதியில் பணியாற்றிய வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட 10 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் சுகாதார அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர்.

மேலும், அந்த வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்த அனைத்து நோயாளிகளும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முடிகிறது ட்ரம்பின்ஆட்டம் வருகின்றார் ஜோ பைடன்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சி வேட்பாளரும் முன்னாள் உப ஜனாதிபதியுமான ஜோஸப் பைடன் தெரிவு செய்யப்படுகின்றமை பெரும்பாலும் உறுதியாகி விட்டது.

வாக்கு எண்ணிக்கையில் கடைசியாகக் கடும் போட்டி இடம் பெறுவதாகக் கூறப்பட்ட ஐந்து மாநிலங்களில் நான்கில் தொடர்ந்து முன்னேறி வரும் ஜோ பைடன், அதிபர் ட்ரம்பைத் தாண்டி பிரகாசமான – முன்னிலையான – நிலைமையை நோக்கி முன்னேறி வருகின்றார்.

பென்ஸில்வேனியோ, ஜோர்ஜியா, நெவாடா, அரிசோனா ஆகிய மாநிலங்களிலேயே ஜோ பைடன் முன்னேறி தமது வெற்றியை உறுதி செய்யும் கட்டத்தை எட்டியிருக்கின்றார்.

வாக்கு எண்ணிக்கை முடிவுறாதிருக்கும் ஐந்து மாநிலங் களில் ஒன்றான வட கரோலினாவில் மட்டும் ட்ரம்ப் இன்னும் முன்னிலை வகிக்கின்றார்.

அமெரிக்கா முழுவதும் உள்ள மாநிலங்களில் மொத்த மாகத் தெரிவு செய்யப்படும் 538 பிரதிநிதிகள் இடத்தில் 270 இடங்களைப் பெறுபவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படு வார். தற்போது வாக்கு எண்ணிக்கை போகின்ற போக்கில் 300க்கும் குறையாத இடங்களை ஜோ பைடன் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கீழ் 2009 முதல் 2017 வரை எட்டு ஆண்டுகள் உப ஜனாதிபதியாக இருந்த ஜோ பைடன் வரும் 20ஆம் திகதி 79 வயதை எட்டுகின்றார். அமெரிக்க வரலாற்றில் மிக அதிக வயதில் பதவியேற்கப் போகும் ஜனாதி பதியாக அவரே இருப்பார்.

பைடனின் வெற்றி உறுதியாகி வருகின்றமையை அடுத்து, அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் அவரது தலை மையகம் அமைந்துள்ள வில்மிங்டன் பகுதி உடனடியாக அமெ ரிக்க விமானப்படையின் வான் வெளிப் பாதுகாப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தில் புலனாய்வாளர் கள், பாதுகாப்பு அதிகாரிகள் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

பைடனின் இந்த வெற்றியில் பல புதுமைகள் உள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் ஆகக் கூடிய வாக்குகளை – சுமார் ஏழரைக் கோடி பேரின் வாக்குகளை – பெற்றவர் அவர்தான்.

அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதியாகப் பதவியில் இருப்பவரை எதிர்த்துப் போட்டியிட்டு, பதவியில் இருக்கும் ஜனாதிபதியைத் தோற்கடித்த பெருமையும் ஜோ பைடனுக்குக் கிட்டுகின்றது.

அமெரிக்க வரலாற்றில் இப்படி பதவியில் இருக்கும் ஜனாதி பதி அடுத்த தேர்தலில் தோற்கடிக்கப்படுவது இது ஐந்தாவது தடவையாகும்.

ஜோ பைடனின் வெற்றியில் அவரது உப ஜனாதிபதி வேட் பாளரான – தமிழ் நாடு சென்னையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் வம்சாவளிப் பிரஜையான – கமலா ஹரீஸ் அம்மை யாருக்கு பங்களித்திருக்கின்றார்.

அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதி அல்லது உப ஜனாதி பதி பதவிக்கு ஒரு பெண்மணி தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். அதுவும் வெள்ளையரல்லாத ஒரு பெண்மணி அந்தத் தகுதியைப் பெறுகின்றமை முக்கிய விடய மாகும்.

அது மட்டுமல்ல, தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய் யப்படும் ஜோ பைடன் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வரை – 2017 வரை எட்டு ஆண்டுகள் உப ஜனாதிபதியாக இருந்தவர். இப்போது அவருக்கு வயது 79. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2024 நடைபெறும் போது அவருக்கு வயது 83 ஆக இருக்கும். அந்தச் சமயத்தில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட் பாளராகக் களமிறங்கும் வாய்ப்பு இப்போது உப ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கமலா ஹரீஸ் அம்மையாருக் குக் கிட்டும் சந்தர்ப்பம் அதிகம் உண்டு என்பதும் கவனிக்கத் தக்கது.

அமெரிக்க அதிபர் பதவி மாற்றம், அமெரிக்காவின் சர்வ தேச உறவு நிலைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியும்.

ஏற்கனவே ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி பராக் ஒபாமாவின் காலத்தில் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அதிக ஈடுபாடு காட்டிப் பங்களிப்புச் செய்த அமெரிக்கா, பின்னர் குடியரசுக்கட்சி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் காலத்தில் அந்தக் கவுன்ஸிலிலிருந்தே வெளியேறியி ருந்தது.

இப்போது மீண்டும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சியில் திரும்பவும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்கா முழு அளவில் பங்களித்து ஈடு பாடு காட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனால் இலங்கைக்குக் காத்திருக்கின்றது தலையிடி என்று நம்பலாம்.

# மக்களைக் கடுமையாக கண்காணிக்கப் பணிப்பு!

## அதிகாரிகளுக்கு விதித்தார் ஜனாதிபதி



ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் சுய தனிமைப்படுத்தல் நடைமுறைகளைக் கடுமையாகக் கண்காணிக்குமாறு ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கொரோனா தொற்றாளர்களுடன் தொடர் புடையவர்கள் எனக் கண்டறியப்பட்ட அனைத்து குடும்பங்களும் தத்தமது வீடு களிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தற்போது நாடளாவிய ரீதியில் சுமார் 31 ஆயிரத்து 457 வீடுகளில் 84 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். மேல் மாகாணத்தில் 13 ஆயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 676 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரும் முறையாகக் கண்காணிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந் திக்கும் கொவிட் ஒழிப்பு விசேட செயலணி நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) ஒன்று கூடியபோதே ஜனாதிபதி இந்தப் பணிப் புரையை விடுத்தார்.

நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் கண்டறியப்பட்டால் அவர்களுடன் தொடர்பு டையவர்கள் மற்றும் அவர்கள் வசிக்கும் பிரதேசம் தொடர்பாக விசேட கவனம் செலுத் தப்பட வேண்டும்.

தேவை ஏற்படின் அந்தப் பிரதேசத்தைத் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தோட்டங்கள் மற்றும் அடுக்குமாடி வீடு கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார மத்திய நிலையங்களை மொத்த விற்பனைக்கு மட்டும் மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. சுகாதார வழிகாட்டல் களைப் பின்பற்றியும் பி.சி.ஆர்.பரிசோதனை களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டும் மிகுந்த கவனத்துடன் வர்த்தக நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மரக்கறி, பழங்கள் மற்றும் அத்தியாவ சியப் பொருள்களை எடுத்துக்கொண்டு மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் லொறிகளுக்கு ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரங்கள் அவசியமில்லை. கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தின் செயற்பாடு களைத் தொடர்ச்சியாக பேணுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட் டுள்ளன என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், தனியார் வைத்தியசாலைகளின் பங்களிப்புடன் சுகாதார அமைச்சினதும் கடற் படையினதும் கண்காணிப்பின் கீழ் வர்த்தக வலயத்தை அண்டிய பிரதேசங்களில் பி.சி. ஆர்.பரிசோதனைகளை எழுமாறாகவும் தொடர்ச்சியாகவும் செய்வதற்கும் ஜனாதிபதி யால் பணிப்புரை வழங்கப்பட்டது.

# உயிர்த் தியாகம் செய்வதிலும் பார்க்க பவித்திரா பதவி விலகுவது மேலானது!

## முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டும். உயிரைத் தியாகம் செய் வேன் எனக் கூறத் தேவையில்லை என முன் னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காக அண்மையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மத நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொண்ட செயற்பாடு பல்வேறு தரப்பினராலும் வெகு வாக விமர்சிக்கப்பட்டது.

இதன்காரணமாக அதுதொடர்பாக அவர் கடந்த செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார். அதன்போது தனது உயிரைத்தியாகம்செய்வதனூடாககொரோனா வைரஸை இல்லாதொழிக்க முடியுமென் றால், அதற்கும் தான் தயாராக இருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தனது ருவிட்டர் பக்கத்தில் வெளி



யிட்டுள்ள பதிவிலேயே மங்கள சமரவீர மற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டி ருக்கும் நெருக்கடியை சுகாதார அமைச்ச ரால் கையாள முடியாவிட்டால், அவர் பதவி விலகவேண்டும்.

மாறாக தனது உயிரைத் தியாகமாக வழங் குவதற்குத் தயாராக இருக்கிறார் எனக் கூறத் தேவையில்லை. உயிர்த்தியாகம் அல்லது தற்கொலை என்பது பௌத்த தர்மத்துக்கு விரோதமானதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வாழைச்சேனையில் ஒருவருக்கு தொற்று!

வவுனியா, நவ.07

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் நேற்று வெள்ளிக்கிழமை ஒருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினமும் இருவர் இனங்காணப்பட்டமையைத்தொடர்ந்து வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் இதுவரை மொத்தம் 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்.'
- மார்ட்டின் லூதர் (ஜேர்மனியக் கத்தோலிக்க மதகுரு)

# கிராம அலுவலரின் படுகொலைக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம்








மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இலுப்பைக் கடவை கிராம அலுவலரான எஸ்.விஜியேந்திரன் (வயது – 55) என்பவருடைய கொலையைக் கண்டித்தும், படுகொலைக்கு நீதி வேண்டியும், குற்றவாளிகள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் எனக் கோரியும் மாந்தை மேற்கு பிரதேச செயலக பணியாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச் செயலகத்துக்கு முன் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன், உதவி பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசச் செயலக உத்தியோகத்தர்கள், மாந்தை மேற்கில் கடமையாற்றும் கிராம அலுவலகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அதன்போது கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு பட்டி அணிந்து பல்வேறு வசனம் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்தப் பதாதைகளில் 'அரச சேவைக்கு சன்மானம் ஆறடி கிடங்கா?', 'கொலையாளி யார்? விசாரணையைத் துரிதப்படுத்துங்கள்', 'அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்', 'கிராம அலுவலகர் விஜியேந்திரனின் கொலைக்கு நீதி வேண்டும்' – உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்ட கிராம அலுவலரின் மரணம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு கொலைகாரர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பாதுகாப்பையும் உறுதி படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இலுப்பை கடவை கிராம அலுவலரான எஸ்.விஜியேந்திரன் (வயது – 55) என்பவர் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் வைத்து மர்மமான முறையில் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 20 நிமிடத்தில் கொரோனா தொற்றை கண்டறியும் பரிசோதனை விரைவில்!

ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதா என்பதை 20 நிமிடங்களில் கண்டறியக்கூடிய அவசர பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பரிசோதனை முறை மூலம் பி.சி.ஆர். பரிசோதனை ஊடாக தொற்றாளர்களை இனங்காண்பதையும் விட விரைவில் நோயாளர்களை இனங்காண முடியும் என்று சுகாதார அமைச்சின் இரசாயனக் கூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சமன் ரத்னாயக்க தெரிவித்தார்.

இதன்படி, உலக சுகாதார அமைப்பால் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு லட்சம் வைரஸ் பரிசோதனைக் கட்டமைப்புக்களைக் கொரியாவில் இருந்து தரு வித்திருப்பதாகவும் பிரதிப் பணிப் பாளர் கூறினார்.

அடுத்த வாரம் இவ்வாறான எட்டு லட்சம் பரிசோதனைக் கருவிகளைத் தருவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்த அவர். முதலில் தருவிக்கப்படும் இந்தக் கருவிகள் மூலம் முதலீட்டுச் சபையிலும் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தொழிற்சாலையிலும் பணிபுரியும் சுமார் 8 லட்சம் ஊழியர்கள் பரிசோதிக்கப்படவுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சின் இரசாயனக்கூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சமன் ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

## கல்முனைப் பிராந்தியத்தில் மேலும் இரு தொற்றாளர்கள்!

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்தில் உள்ள இறக்காமம் பிரதேசத்தில் மேலும் இரு கொரோனா தொற்றாளர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணன் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இறக்காமம் பகுதியில் இருந்து தொழில் நிமிர்த்தம் கொழும்பின் புத்தக கடை ஒன்றில் பணிபுரிந்து மீண்டும் தமது இல்லங்களுக்குத் திரும்பியிருந்த நிலையில் இறுதியாக அடையாளப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று உள்ளவரின் தந்தைக்கும் அவரின் சகோதரருக்கும் கடந்த 4 ஆம் திகதி பெறப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகளின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகி இருந்தன.

இருவரின் முடிவுகள் கிடைக்கப் பெற்றமையை அடுத்து இறக்காமம் பகுதியில் மேலும் இரு நோயாளிகள் என இவ்விருவரும் அடையாளப்படுத்தப்பட்டு நேற்றுக் காலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

மேலும் கல்முனைப் பிராந்தியத்தில் இதுவரை மினுவாங்கொடை, பேலியகொடை, திவுலப்பிட்டிய கொத்தணியில் 20 பேர் கொவிட்19 உள்ளவர்களாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றமையுடன் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் ஏற்கனவே இருவர் அடையாளப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 22 பேர் இதுவரை அடையாளப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெலிக்கடைச் சிறையில் பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு,வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் மற்றும் ஊழியர்களிடம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 196 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் ஏழு புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் இதுவரை 6 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து சிறைச்சாலைகளிலும் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், கைதிகளைப் பொது மக்கள் பார்வையிடும் செயற்பாடும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## தெரணியகலையில் 3 தொற்றாளர்கள் கேகாலையில் 151 ஆக உயர்ந்தது!

கேகாலைமாவட்டத்தில்கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. மாவட்டத்தின் பிரதான நகரங்களை மையப்படுத்திய பிரதேச செயலகங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில், தெரணியகலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 3 பேர் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளனர். கடந்த 2 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்றுமுன்தினம் கிடைக்கப்பட்ட நிலையில் அதில் 3 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் தெரணியகலை வித்தியாலய மாவத்தை, உடபொல, மாலிபொட தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தொற்றாளர்களாக உறுதிசெய்யப்பட்டுள்ளனர். இந்த தொற்று பேலியகொடை மீன்சந்தை கொத்தணி பரவலோடு சம்பந்தபட்டதாக அறிய முடிகிறது.

தெரணியகலையில் கடந்த 2 ஆம் திகதி முதலாவது தொற்றாளர் மாலிபொட தலாவ பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டார். இவருக்கு பேலியகொட மீன்சந்தையுடன் சம்பந்தப்பட்ட அவிசாவளையில் தொற்றுக்குள்ளான மீனவருடன் தொடர்பைப் பேணியதால் தொற்றுறுதியாகியதாக தெரணியகலை பிரதேச சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 12 வயது சிறுவனும் உள்ளடங்குகிறான் என அவர் மேலும் தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை வரை மொத்தமாக 151 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமம் சுற்றுலா சென்ற 120 பேர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு சுற்றுலா சென்ற 120 பேரையும் கதிர்காமம் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து வரும் 14 தினங்களுக்கு தனிமைப்படுத்தியுள்ளனர்.

கதிர்காமத்துக்கு சுற்றுலா சென்ற மேற்படி 120 பேரும், அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கதிர்காமம் பொது சுகாதாரப் பரிசோதகர் சமன் திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கும் இந்த வேளையில் கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு எவ்வகையில் இந்த 120 பேரும் சுற்றுலா சென்றார்களென்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து கதிர்காமம் வந்த சுற்றுலா வாசிகள் தொடர்பாக கதிர்காமம் பொது சுகாதாரப் பிரிவினருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய பொதுசுகாதாரப் பிரிவினர் விரைந்து அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை அவரவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளிலேயே தனிமைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

அங்கம் 05

சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் - T.R.R.O)
ஆஸ்திரேலியா



# இலங்கை – இந்திய ஒப்பந்தம்:

# ஒரு வரலாற்றின் திசை நோக்கு

இலங்கையில் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், மூன்று மாவட்டங்களைச்சேர்ந்த அனைத்து மக்களும் தங்கள் வாழ்விடங்களை விட்டு இடம்பெயரநேர்ந்தது. இவ்வாறு இடம்பெயர்ந்தோர்



பல்லாயிரம்.

முன்னைய இடப்பெயர்வுகளையும் கணக்கிலெடுத்தால் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்



தார்கள்.

வட, கிழக்கின் அனைத்து நிருவாகத்திலும் இராணுவத்தின் தலையீடு தவிர்க்கமுடியாததாகியது. காணிகளை மக்களிடம் மீளக்கையளிக்கும் சுற்றுநிருபங்களும் அரசிற்கு ஏற்றவகையில்தான் அமைந்திருந்தன.

அதுபற்றிய முடிவுகளை எடுக்கும் உரித்துடையவர்களாக படையினரே இருந்தனர்.

இந்தப்பின்னணியில், இந்தியாவில் நடந்த அச்சந்திப்பின் நோக்கம் இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றியதும் அதன் அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வில் ஈழத்தமிழ் அகதிகள் பாதுகாப்பாக வாழ்வதற்குத் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்தி திருப்பி அனுப்பவேண்டும் என்பதே. இச்சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தலைவர்களிடமிருந்து, இந்திய ஒப்பந்தத்தை அப்படியே நிறைவேற்றித்தரவேண்டும் என்று இந்தியாவிடம் கோரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

அவ்வாறு கோரும் பட்சத்தில் மேலதிக நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்கும் என்று உணரப்பட்டிருந்தது. இந்தக்கலந்துரையாடலுக்கு சமர்ப்பிப்பதற்கு ஒரு



பின்னணியும் தலைவர்கள் நிறைவேற்றக்கூடிய சாராம்சங்களையும் தயாரித்து தருமாறு என்னைக்கேட்டிருந்தனர்.

அதனைத்தயாரித்து எனது நண்பரான நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு அனுப்பி, அதை பார்வையிட்டு கருத்துக் கூறி ஆலோசனை தருமாறும் கேட்டிருந்தேன். அந்தச்சமயம் நீதியரசர் தனது உத்தியோக அலுவலகிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார். கம்பன் கழகத்திலும் ஆன்மீக சொற்பொழிவுகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

இடையிடையே தமிழர் நிலை பற்றியும் விடுதலைப் போராளிகள் பற்றியும் சில கருத்துக்களை வெளிப்படுத்தினார். நாமிருவரும் கொழும்பில் சட்டத்தரணிகளாக பணியாற்றிய காலங்களிலிருந்துநன்கு உறவாடியவர்கள்.

அவர் அப்போது எந்த அரசியலுக்கும் செல்லவில்லை. ஆனால், ஏனோ எத்தனை தடவை அந்த ஆலோசனைகளைப்பற்றி அவருக்கு நான் நினைவூட்டியும் அவர் அதனை திருத்தங்களோடு திருப்பி அனுப்பவில்லை.

வருவதற்கான அக்கறையும் காண்பிக்கவில்லை. யார், யார் வரக்கூடும் என்று மாத்திரமே வினவினார்.

அந்த மகாநாடு டில்லியில் அமைந்துள்ள அரசியல் சட்ட அமைப்பு நிறுவன மண்டபத்தில் (Constitution Club Of India) மனித உரிமைகளுக்கும் சர்வதேச வளர்ச்சிக்குமான நாடாளுமன்ற அமைப்பின் (PFHRGD) அனுசரணையுடன் 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 – 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

வெளிநாடுகளிலிருந்து சிலரும், இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், துரைரத்தினம், சிறீதரன் (இவர்கள் இருவரும் பத்மநாபா அணியைச்சேர்ந்தவர்கள்), கஜேந்திரமார் பொன்னம் பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் அகதிகளின் உள்ளூர் தலைவர்களும் முக்கியமாக இதனை ஏற்பாடு செய்த பரந்தன் ராஜனும் ஜெயரஜனியும் பங்குபற்றினார்கள்.

இலங்கை அரசு மேற்கொள்ளும் காணி பறிமுதல் நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை கவனத்தில் கொண்டு, இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகள் மீளத் திரும்பிதம் சொந்த இடங்களில் வாழ்க்கையை தொடங்க சுமுகமான நிலையை அங்கு உருவாக்குதல், உயர்மட்ட பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ்மக்களின் காணிகள் பறிமுதல் செய்வதை இலங்கை அரசு நிறுத்தவேண்டும் முதலான சில தீர்மானங்களை ஏகமனதாகவும் உடனடியாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இம்மகாநாட்டில் கோரப்பட்டது.

அடுத்து, இந்தியாவில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் நிலை பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

மேலும், இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்கான ஒரு நிரந்தரத் தீர்மானம் என்ற கருத்தில் நிலைமைகள் ஆராயப்பட்டன. இந்தியாவும் இலங்கை அரசும் 1987



இல் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதோ அன்றில் அதை மீளெடுப்பதோ தற்சமயம் உகந்தது என்ற கருத்து முன்மொழியப்பட்டது.

தமிழரசுக்கட்சி பிரதிநிதிகள் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒரு பொதி என்று குறிப்பிட்டு, அதனை தற்போது மீளத்தூக்கத் தேவையில்லையென்றும் அதனையும் தாண்டிய அரசியல் தீர்வு ஏற்படுத்துவதில் தாம் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசுவதில் தீவிர அக்கறையிலிருப்பதாகக் கூறினர். ஆகவே, அந்த இரண்டு நிலையையும் விட்டுவிட்டு, பிரதிநிதிகளால் கூறப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கி தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய இன்றைய அவசியமான கோட்பாடுகளைக்கொண்ட ஒரு தீர்மானத்தை உருவாக்கும் பணி தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ், சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி. ஆர். எல். எவ். கட்சிகளிடம் பணிக்கப்பட்டது.

அதையடுத்து, கஜேந்திரகுமார், ஈழத்தமிழர்களின் தனித்துவ அடையாளத்தை இல்லாமல் செய்வதே இலங்கை அரசின் நோக்கமாக இருக்கிறது. ஈழத் தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையினால் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க அருகதை உள்ளவர்கள் என்ற ரீதியிலேயே ஒரு நியாயமான தீர்வை ஆராயலாம் என்றார்.

கலந்துகொண்ட பிரதிநிதிகளிடத்தில் இந்தக்கருத்துக்கள் மீது பலத்த வேறுபாடு இருக்கவில்லை.

ஆனால், அதேசமயம், இன்றைய சூழ்நிலையில் இந்திய அரசும் இந்திய மக்களும் உடனடியாக தமிழ் மக்கள் படும் இன்னல்கள் மேலும் உக்கிரமடையாதவாறு அவர்களது தனித்துவத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்ட முறையில் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த உத்தரவாதம் தரவேண்டும் என்ற கோரிக்கையை ஈ. என். டி. எல். எவ். பிரதிநிதிகள் முன் வைத்தனர்.

இந்த ஆலோசனைக்கு பலமான ஆதரவு ஏனைய பிரதிநிதிகளிடமிருந்தாலும், அதற்கான ஆதரவு



சமிக்ஞை கஜேந்திரகுமாரிடமிருந்தோ கஜனிடமிருந்தோ வரவில்லை.

தாங்கள் தங்களது இந்த நிலைப்பாட்டின் காரணத்தினால்தான் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளி



யேற நேர்ந்தது என்று கூறியமையுடன், தாங்கள் அதற்கு ஒப்புதல் தரவில்லை என்றனர்.

இவ்வேளையில், மாவை சேனாதிராஜா, அனைவரும் ஒருமுகமாக பயணிக்கவேண்டும் என்றும் கஜேந்திரகுமாரையும் கஜனையும் உள்வாங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், நாம் மேற்கொள்ளும் தீர்மானங்களின் பின்னணியில், இந்திய அரசு ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்கு செயற்படுகிறது என்ற தோற்றப்பாட்டை இலங்கை அரசுக்கு காண்பித்து, இந்தியாவுக்கு நாம் சங்கடத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதே பெரும்பான்மையான பிரதிநிதிகளின் அபிப்பிராயம். அதனை உணர்ந்து நாம் செயல்படவேண்டும் என்றார்.

ஆனால், தமிழ்க்காங்கிரஸ் அதனை ஏற்கவில்லை. அதனால் ஒருமுகப்பட்ட ஒரு தீர்மானத்தை இந்தியத் தரப்பிடம் கையளிக்கக்கூடிய நிலை வரவில்லை.

இதனைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங்குடன் ஒரு சந்திப்பும் அதைத்தொடர்ந்து இந்திய அதிகாரிகளுடனும் பல இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தையும் இருந்தது.

எவ்வளவோ கலந்துரையாடியும் மதிய போசனத்திற்குப்பின்னர் வந்து ஓர் அபிப்பிராயத்தை எடுத்தபோது, பலர் ஆதரவாக கருத்து தெரிவித்தனர்.

ஆனால், என்ன நடந்ததோ, மாவை சேனாதிராசா சிறிது அவகாசம் கேட்டார். பின்னர் வந்து பேசியபோது, அத்தகைய ஒரு மகஜரை இந்திய அரசுக்கு வழங்கும்போது அது எல்லோரும் முழுமையாக ஏற்றுக்கொண்டதாகவே இருக்கவேண்டும், கஜேந்திரகுமாரும் கஜனும் சேர்ந்து பயணிக்காமல் விட்டால், அப்படியான தீர்மானத்தை கொடுப்பதுதவிர்க்கப்பட வேண்டுமென்றார்.



சுமந்திரனும்அதற்கு இணங்கவே, 13 ஆவது ரத்தை எந்தமாற்றமும் இன்றி அமுல்படுத்த இலங்கை அரசுக்கு உடனடிஅழுத்தம்கொடுக்க வேண்டும் என்று இறுதியில் முடிவானது.

அதனை மன்மோகன்சிங் கண்டுகொள்ளவில்லை. தங்களது குறுகிய அரசியல் லாபங்களிலேயே காய்கள் நகர்த்தப்பட்டமை மனவேதனை தந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# நாட்டினது சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியை நோக்கி பயணிக்கிறது!

## நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வேதனை



சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியையே எதிர்நோக்கி வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முஜிபுர் ரஹ்மான் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையால், சுயதொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தான் வரும்போது வீதியோரங்களில் காணப்படும் விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன என ஊடகங்களின் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

ஊரடங்கு காரணமாகவே அவை மூடப்பட்டுள்ளன என்பதை அவர் மறந்துவிட்டார் போல. கொழும்புக்குள் நாளாந்தம் ஊதியம் பெற்று வாழ்பவர்களே அதிகளவில் இருக்கின்றனர்.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் காரணமாக இவர்களது அனைத்து தொழில் நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளன. அதற்கமைய ஜனாதிபதி இவர்கள் தொடர்பில் ஊடகங்களின் முன்னிலையில் கருத்துரைப்பதை விடுத்து, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும்.

அரிசியின் நிர்ணய விலை தொடர்பில் இன்னுமொரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் இதுவரையில் அரிசிக்கான நிர்ணய விலை தொடர்பில் மாத்திரம் மூன்று வர்த்தமானிகளை வெளியிட்டுள்ளது.

ஆனால் இதுவரையில் நிர்ணய விலையை அறிவிக்க முடியவில்லை. இவ்வாறான நிலைமையில் எவ்வாறு கொரோனா வைரஸ் பரவலை இவர்கள் கட்டுப்படுத்துவார்கள்.

மக்கள் பசியால் உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், மக்கள் தொடர்ந்தும் அமைதியாக இருக்கமாட்டார்கள். சுபீட்சமான ஆட்சி இன்று தோல்வியையே எதிர்நோக்கி வருகின்றது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நிர்ணய விலைக்கு மேல் அரிசியை விற்போருக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



அரிசி வகைகளின் அதிகபட்ச விலையை மீறி விற்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரிசி விற்பனைக்காக அதிகட்ச விலையை நிரணயித்து வர்த்தமானி வெளிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள விலையை மீறி விற்பவர்களை நுகர்வோர் விவகார ஆணையகத்தின் அதிகாரிகளின் ஊடாகக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தலின்போது போலித் தகவல் வழங்கினால் 5 வருடகால சிறைத் தண்டனை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எச்சரிக்கை

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் போது போலித் தகவல்களை வழங்கும் நபர்களை ஐந்து வருடங்கள் வரை சிறைவைக்க முடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல், நடவடிக்கைகளின் போது எவரேனும் ஒருவர் அவருடைய பெயர் அல்லது விலாசம் தொடர்பில் பிழையான விவரங்களை வழங்கினால் அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கமுடியும்.

இதேவேளை, தன்னை பிறிதொரு நபரை போன்று அடையாளப்படுத்தினாலும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும். இது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கமைய குற்றச்செயலாக இருப்பதுடன், பிரிதொரு நபராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் போது அங்கே மோசடிகளும் இடம்பெற்றுள்ளன என்ற நிலைபாட்டுக்கு வரமுடியும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சந்தேக நபர்களால் வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் ஆவணப் படுத்தப்படுகின்றமையால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து, அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை நிரூபிக்கவும் உரிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கும். அதற்கமைய மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நபரொருவரை ஐந்து வருடங்கள் வரை சிறைவைக்கவும் முடியும்.

# தனிமைப்படுத்தல் நிறைவு 43 பேர் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, நவ.07

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 43 பேர் நேற்று வெள்ளிக்கிழமை தங்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 63 ஆயிரத்து 644 பேர் இதுவரையில் மொத்தமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 30 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 2 ஆயிரத்து 420 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்து 16 இலங்கையர்களும், ஜப்பானின் நரிட்டாவில் இருந்த 17 பேரும், கட்டாரின் தோஹாவில் இருந்து ஒருவரும் நாட்டுக்கு நேற்று காலை திரும்பினர்.

எனினும் நாட்டுக்குத் திரும்பிய அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின் அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்காக நேற்றுமுன்தினம் இரவு 9 ஆயிரத்து 999 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் நாட்டில் மொத்தம் 5 லட்சத்து 66 ஆயிரத்து 358 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கழிவுகள் அடங்கிய கொள்கலன் மேலும் 62ஐ திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை

## எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தது சுங்கம்

கொழும்பு, நவ.07

கொழும்பு, துறைமுகத்தில் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட மேலும் 82 கொள்கலன்களை மீண்டும் இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தலா 65, 10, 07 கொள்கலன்கள் மூன்று கப்பல்களினூடாக நேற்று வெள்ளிக்கிழமை திருப்பி அனுப்பப்படன.

ஒக்ரோபர் 30 ஆம் திகதி 20 கழிவுக் கொள்கலன்கள் இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என சுங்க ஊடக செய்தித் தொடர்பாளர் சுங்கத்தின் கூடுதல் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜெயரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 263 கொள்கலன்களில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக நாட்டுக்கு இவை கொண்டு வரப்பட்டுள்ளன.

130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுக வளாகத்திலும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் 21 கொள்கலன்கள் இங்கிலாந்துக்கு முன்னர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இந் நிலையில் மீதமுள்ள கொள்கலன்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பஸ் கட்டணத்தை அதிகரிக்க எந்தத் தீர்மானமும் இல்லை!

## போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் உறுதி

பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு பஸ் சங்கங்கள் கோரியிருக்கின்றபோதும் தற்போதைய நிலையில் பஸ் கட்டணம் அதிகரிக்க எந்த தீர்மானமும் இல்லை. என்றாலும் கொவிட் போக்குவரத்து கொள்கையின் பிரகாரம் பஸ் கட்டணங்களில் சிறியதொரு மாற்றம் ஏற்பட்டாலும் அது தற்காலிகமானதாகும் என போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பஸ் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இலங்கை தனியார் போக்குவரத்து சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

நாட்டின் தற்போதைய நிலைமையில் பஸ் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பஸ் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றபோதும், பஸ் கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

பஸ் சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் அந்த சங்கங்களுடன் கலந்துரையாடி, ஒரு சில இணக்கப்பாடுகளுக்கு வந்திருக்கின்றோம். அதன் பிரகாரம் எதிர்வரும் வாரங்களுக்குள் கொவிட் போக்குவரத்து கொள்கை ஒன்றைத் தயாரிக்க இருக்கின்றோம்.

சுகாதார பிரிவின் ஆலோசனைக்கமைய கொவிட் 19 கொள்கையின் பிரகாரம் பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடும்போது பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் கூடுதலாக அவதானம் செலுத்தப்படும்.

அத்துடன் கொவிட் போக்குவரத்து கொள்கையின் பிரகாரம் பஸ் கட்டணங்களில் சிறியதொரு மாற்றம் ஏற்பட்டாலும், கொவிட் அச்ச நிலைமை இல்லாமலாகி இருப்பதை உறுதிசெய்யப்பட்ட பின்னர், பஸ் கட்டணம் மீண்டும் முன்னர் இருந்த பிரகாரம் அறவிடப்படும்.

ஏனெனில் தற்போதைய நிலைமையில் பயணிகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதுபோல் பஸ் உரிமையாளர்கள் தொடர்பாகவும் நியாயமாக சிந்திக்கவேண்டும். அதன் பிரகாரம் இரண்டு தரப்பினரும் சங்கடமான நிலைமைக்கு ஆளாகாத வகையில் தீர்மானம் மேற்கொள்ளவேண்டி இருக்கின்றது.

அத்துடன் தற்போது இடம்பெற்று வரும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை நேற்றுடன் முடிவடைந்தது. அதன் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில் பஸ் மற்றும் ரயில் போக்குவரத்துகள் நிறுத்தப்படும்.

உயர்தர பரீட்சை காரணமாகவே ஊரடங்கு காலப்பகுதியிலும் பஸ் மற்றும் ரயில் சேவைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் அந்த சேவைகள் இடம்பெறவேண்டிய தேவை இருக்காது. – என்றார்.

# சுகாதாரக் கட்டுப்பாடுகளைப் புறந்தள்ளி யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டம்

## கொரோனா அபாயப் பகுதியான கொழும்பில் இருந்து வந்த அமைச்சர்களுடன் தமிழ் எம்.பிக்கள், அதிகாரிகள் பங்கேற்பு



யாழ்ப்பாணம்,நவம்பர் 06

அரசால் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி - தனிமைப்படுத்தல் சட்டத்தை உதாசீனம் செய்து - யாழ். மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது பாதுகாப்புப் பிரிவினர் என நூற்றுக்கணக்கானோர் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக் கூட்டத்தை இன்று நடத்தியுள்ளனர்.

இலங்கையில் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் அபாய பிரதே சங்கள் அல்லது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் இருந்து பிற மாவட்டங்களுக்கு செல்வோர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்ற சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை முற்றாக உதாசீனம் செய்து இந்தக் கூட்டம் நடைபெற் றுள்ளது.

இதில் கொழும்பிலிருந்து அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய பாதுகாப்புப் பிரிவினர் என நூற்றுக்கணக்கானவர்கள் வந்து கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் சமூக இடைவெளியைப் பேணாமல் மிக நெருக்கமாக அமைச்சர்கள், நாடா ளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலர் அமர்ந்திருந்து கூட்டம் நடத்தியுள்ளனர்.

சாதாரணமாக அபாய பிரதேசம் அல்லது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து வரும் மக்கள் தொடர்பாகவும், ஆலயங்கள், திருமண மண்டபங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் மக்கள் தொடர்பாகவும் அதிக அக்கறை எடுக்கும் சுகாதாரப் பிரிவினர் யாழ்.மாவட்ட செயலகத்தில் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரச அதிகாரிகளும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவதை வேடிக்கை பார்த்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கோயில் பூஜைகளில் வெளிமாவட்டத்தவர்கள் கலந்துகொண்டனர் என்பதற்காகப் பூசகர் உட்பட ஒரு சில பொதுமக்களைப் பிடித்து 14 நாள்கள் தனிமைப்படுத்துவதற்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை பிரயோகித்த சுகாதாரப் பிரிவு இன்று யாழ்ப்பாணத்தில் உறக்கத்தில் இருந்ததா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அபாய பிரதேசங்கள் அல்லது தனி மைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகும் பகுதிகளில் இருந்து வருவோர் தொடர்பான தகவல்களை வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தொலைபேசி இலக்கங்களை அறிவித்திருந்தார். அந்தத் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு சுகாதாரப் பிரிவின் நடவடிக்கை என்ன என வினவியபோது அதற்குப் பதிலளித்தவர்கள் யாழ். சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறினர்.

பின்னர் யாழ். சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடார்பு கொண்டபோது, அவர்களுக்குக் கூட்டம் நடப்பதே தெரியாது என்பதுபோல் பதிலளித்தமையுடன், பல கூட்டங்களுக்குத் தங்களிடம் அனுமதி பெறப்பட்டது எனவும், இதற்கும் அனுமதி பெறப்பட்டதா என்பதை ஆராய்ந்து பார்பதாகவும் கூறினர்.

அப்படியானால் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியைப் பெற்றால் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறலாமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதேபோல் வெளிமாவட்டங்களுக்குச் சென்று வந்த வாகன சாரதிகள், பஸ்களில் பயணிப்போர் தனிமைப்படுத் தப்பட்டிருக்கும் நிலையில் இன்றைய கூட்டத்துக்குக் கொழும்பிலிருந்து வாகனங்களிலில் வந்தவர்களுக்குத் தனிமைப்படுத்தல் சட்டம் பொருந்தாதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# எழுத்துமூல உத்தரவையும் மீறியே யாழ். கச்சேரியில் கூட்டம் நடந்தது

## மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி குற்றச்சாட்டு

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கூட்டம் நடத்த முடியாது என மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எழுத்தில் அறிவுறுத்தல் வழங்கிய பின்பும் அதனை மீறியே இன்றைய கூட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகர எல்லைப் பகுதிக்குள் கல்யாண மண்டபங்கள், உணவகங்கள், பஸ்கள் ஆகியவற்றுக்கு மட்டும் கட்டுப்பாடு விதித்துவிட்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகள், அரசியல்வாதிகள் 200 இற்கும் மேற்பட்டோர் மாவட்டச் செயலகத்தில் ஒன்றுகூடும் போது சுகாதார வைத்திய அதிகாரி உறக்கத்தில் இருக்கின்றனர் எனக் குற்றம் சாட்டப்படுவது தொடர்பில் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவிக்கையில் -

வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இந்தக் கூட்டம் நடத்த முடியாது என்பது உண்மை. அதற்கான வழிகாட்டலை சுகாதாரத் திணைக்களத்துக்கும் தெரிவித்து மாவட்டச் செயலாளருக்கும் எழுத்தில் அறிவித்தேன். இத்தனை பணிகளையும் மீறியே இன்று கூட்டம் இடம் பெற்றது மட்டுமன்றி எமக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இவற்றின் அடிப்படையில் எனது அதிகார எல்லைக்குள் நான் ஆற்ற வேண் டிய பணியை ஆற்றினேன். - என்றார்.

# வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டவர் யாழில் சாவு!

வடமராட்சி முள்ளி பகுதியில் வீதி திருத்த பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி றோலருக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

பனாங்கொடை பகுதியை சேர்ந்த எஸ். பி. பிரேமரட்ன (வயது 62) எனும் நபரே உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி - கொடிகாமம் வீதி திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணியில் தொழிலாளி ஈடுபட்டிருந்த போது, பணியில் ஈடுபட்டிருந்த றோலருக்குள் சிக்குண்டு, படுகாயமடைந்துள்ளார்.

அதனை அடுத்து சக தொழிலாளர்கள் அவரை மீட்டு வைத்திய சாலையில் சேர்த்த போதிலும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

# யாழில் எங்களுக்கு ஒரு சட்டம் உங்களுக்கு இன்னொரு சட்டமா?

## அதிகாரிகளிடம் மண்டப உரிமையாளர்கள் ஆதங்கத்துடன் கேள்வி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எமது மண்டபங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் 50 பேருக்கு மேல் பங்குகொண்டால் தடை எனக் கூறியவர்கள் தற்போது முழுமையாகத் தடை செய்த பின்பு தமது மண்டபத்தில் 200 பேருடன் கூட்டத்தை நடத்தியமை எந்தவகையில் நியாயமானது என மண்டப உரிமையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

உணவகங்களில் எவரும் அமர்ந்து உணவு உண்ண முடியாது என விதிக்கப்பட்ட தடையை சுகாதாரம் கருதி உணவக உரிமையாளர்கள் ஏற்று கடைப்பிடிப்பதால் வழமையான வியாபாரம் பாதியாகக் குறைவடைந்துள்ளது. யாழ். நகரில் மட்டும் உணவகங்களில் பணியாற்றிய 200 இற்கும் மேற்பட்டவர்களை உணவக உரிமையாளர்கள் இடைநிறுத் தியுள்ளனர். இன்னும் சில உணவகங்கள் முழுமையாகவே பூட்டப்பட்டு விட்டன.

இதேபோன்று மண்டபங்களில் பணி யாற்றிய பல நூறு பணியாளர்கள் அதாவது சமையலாளர்கள், மண்டப பராமரிப்பாளர்கள் என அனைவரும் தொழிலை இழந்து நிற்கின்றனர். இதற்கான அறிவுறுத்தலை வழங்கியவர்கள், பரிசோதனையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் மாவட்ட செயலகத்தின் மா நாட்டு மண்டபத்தில் ஒரே தடவையில் 200 இற்கும் மேற்பட்டோர் அருகருகே அமர்ந்து 3 மணி நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறானால் சட்டம் - ஒழுங்கு ஏழைகளுக்கு மட்டுமா? அது அதிகாரிக ளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தாதா? தினம் உழைத்து உண்பவன் வயிற்றில் மண் அள்ளிப்போட்டு விட்டு அதிகாரிகள் குளு குளு அறையில் அளப்பறை நடத்தியுள்ளனர். அதற்கும் மேலாக ஊரங்குச் சட்டம் உள்ள மாவட்டத்தில் இருந்தும் அதி பயங்கரமாக கொரோனாத் தொற்று உள்ளது எனக் கூறப்படும் மாவட்டத்தில் இருந்தும் பலர் வந்திருந்தனர்.

இவை அனைத்தும் இடம்பெறும் போது எமது சுகாதார அதிகாரிகள் அனைவரும் ஓடி ஒளித்து விட்டனர். அவர்கள் சென்ற பின்பு அதாவது கள்ளன்போன பின்பு விசுவாபொல்லை எடடா என நகரின் மத்தியில் வந்து நின்று படம் காட்டு வர் - என்றனர்.

# நாட்டினது சில முக்கிய பிரமுகர்களே கொரோனா தடுப்பூசியை பெறுகின்றனர்!

## நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றச்சாட்டு



நாட்டிலுள்ள சில முக்கிய பிரமுகர்கள் சீனாவிடம் இருந்து கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நளின் பண்டார மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தற்போது நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய பலர் உயிரிழந்துள்ள போதிலும், பிரேத பரிசோதனைகளின் பின்னரே அவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இது போன்ற அச்சுறுத்தலான நிலைமைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். முழு நாடும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்துக்கு இது வசந்த காலமாக மாறியுள்ளது.

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்து வருகின்றமை தொடர்பாக அரசாங்கம் அக்கறை செலுத்தாமல் இருக்கின்றது.

அவர்கள் நாட்டுக்கு வருவதற்காக பயணசீட்டைப் பெறுவதற்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு வந்தவுடன், அவர்கள் தனிமைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், தனிமைப்படுத்தல் நிலையங்களாக ஹோட்டல்கள் பயன்படுத்தப்படும் போது, ஹோட்டல் உரிமையாளர்கள் ஆளும் தரப்பினருடைய ஆதரவாளர்களாக இருக்கின்றமையால் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் இலாபம் ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடாக அந்த முயற்சி அமைந்திருக்கின்றது.

சுகாதார அமைச்சர் மக்களைக் காப்பாற்றுவதற்காக கடலில் குதிப்பார் எனவும், மந்திர நீர் நிரப்பப்பட்ட நீரை ஆற்றில் கலந்தும் நாட்டு மக்களுக்கு மூட நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார்.

ஆனால், பிரபுக்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள், வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ள, தடுப்பூசிகளை 70 தொடக்கம் 140 டொலர்கள் செலவில் பெற்றுக் கொண்டு பயன்படுத்திக் கொள்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

பிரபுக்களின் குடும்பத்தினர் எந்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தினாலும் எமக்கு சிக்கல் இல்லை. மாறாக நாட்டு மக்களுக்கும் அந்த வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

ஆளும் தரப்பினருக்கு மக்கள் மீது உள்ள அக்கறையை விட தங்கள் மீதே அக்கறை அதிகமாக உள்ளது. – என குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மீற்றர் இடைவெளியை மக்கள் பின்பற்ற வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.07

ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் போன்றே மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்த போக்கைக் காண்பிக்கின்றது.

இவ்வாறான நிலையில் அவதானம் மிக்க பகுதிகளை அடையாளப்படுத்தாவிட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். 357 மருத்துவ சுகாதார பிரிவுகளில் 60 இற்கும் குறைவான பகுதிகளிலேயே அதிக - கூடிய - அவதானமுடைய பகுதிகள் காணப்படுகின்றன.

எனவே, கட்டுப்படுத்தக் கூடிய மட்டத்திலேயே நிலைமை காணப்படுகிறது. அண்மையில் வீடுகளிலேயே இறந்த சிலருக்கு முதலாவது பரிசோதனையில் தொற்று ஏற்படவில்லை என்ற முடிவும் உயிரிழந்ததன் பின்னர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற முடிவும் கிடைத்துள்ளது.

இவ்வாறான நிலைமை தொடருமானால் தற்போது தொற்றாளர்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் நாம் மரணங்களைப் பற்றி பேச வேண்டியேற்படும்.

மேலும், உயிரிழந்தவர்களுக்கு சமூகத்திலிருந்து வைரஸ் தொற்று ஏற்படவில்லை. மாறாக வீட்டுக்குள் வைரஸ் கொண்டு செல்லப்பட்டுள்ளது.



சிறைச்சாலைகள், பொருளாதார மத்திய நிலையங்கள், ஆடை தொழிற்சாலை என்பவற்றில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

பி.சி.ஆர். பரிசோதனையை விட செலவு குறைந்த முறையில் துரிதமாக முன்னெடுக்கப்படும் பரிசோதனைக்கு இலங்கை மாற வேண்டும். அத்தோடு மீண்டும் மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தலில் இருந்து சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன

கொழும்பு, நவ.07

கொரோனா பரவலைத் தடுக்கும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த புளத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தல் அறிவிப்பிலிருந்து விடுபட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் கல்கமுவ பிரதேச சபை பகுதிகளிலும் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு வரும் ஒன்பதாம் திகதியுடன் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாக் கொத்தணி பாதிப்பு மட்டும் 9 ஆயிரத்தைக் கடந்தது!

கொழும்பு, நவ.07

நாட்டில் நேற்று 383 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்ட அனைவரும் ஏற்கனவே கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின்மொத்தஎண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்து ஒன்பதாயிரத்து 92ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று மட்டும் 765 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இது வரை ஆறாயிரத்து 623 தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 918 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

# தனிமைப்படுத்தலை முடித்து வீட்டுக்கு திரும்பியவர் வீதியோரம் சடலமாக மீட்பு



**கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவர் தனிமைப்படுத்தலை முடித்து புத்தளத்தில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய நிலையில் வீதியோரமாக சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

**குருநாகல் – புத்தளம் வீதியோரம் நேற்றுக் காலை அவரது சடலம் அடையாளம் காணப்பட்டது.**

**கெற்றிப்பொல பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் பணியாற்றி வந்த அவர், கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததை அடுத்துத் தனிமைப்படுத்தப்பட்டார்.**

**தனிமைப்படுத்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு அவர் விடுவிக்கப்பட்ட நிலையிலிலேயே வீடு திரும்பும் வழியில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகளின் பின்னரே அவரது மரணத்துக்கான காரணம் தெரியவரும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

# வடக்கின் நான்காவது சிகிச்சை நிலையம் மாங்குளம் வைத்தியசாலையில் அமைந்தது

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

வடக்கு மாகாணத்தில் நான்காவது கொரோனாச் சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 நோயாளர் படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையமாக இந்தப் பிரிவு இன்றுமுதல் இயங்க ஆரம்பித்துள்ளமை தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை மற்றும் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒரு பகுதி கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம் பகுதியில் 100 படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகின்றது.

# கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட இம்முறை வீடுகளிலிருந்தே தீபாவளியைக் கொண்டாடுங்கள்

## மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்

இலங்கையில் தற்போது வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இந்து சமய மக்கள் அனைவரும் இவ்வருட தீபாவளியை வீட்டிலிருந்தே கொண்டாடுமாறு உரிமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலைமாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்துக்களது பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகையானது இம்மாதம் 14ஆம் திகதி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா திடீர் பரவல் காலப்பகுதியில் வரும் இந்தப் பண்டிகை நாளில் நாம் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வது எமது அனைவரது நல்வாழ்வுக்கும் அவசியமாகும்.

எனவே, எமது வீடுகளில் உள்ள மூத்தோர், கர்ப்பவதிகள் மற்றும் நாட்பட்ட நோய்களுடன் வாழும் உறவுகள் ஆகியோரைக் கொறொனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவும் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இந்தப் பண்டிகைத் தினத்தை அவரவர் வீடுகளில் இருந்து மிகவும் அமைதியாகக் கொண்டாடுமாறு எமது மக்களிடம் நாம் உரிமையோடு வேண்டிக்கொள்கிறோம்.

அயலவர்கள் மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதையும், புத்தாடைகள் மற்றும் அணிகலன்கள் வாங்கச் செல்வதையும் ஆலயங்களுக்குச் செல்வதையும் இவ்வருடம் தவிர்த்து வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன்



மூலம் எம்மை எதிர்நோக்கியுள்ள சுகாதாரச் சவாலை முறியடிப்போமாக! - என்றுள்ளது.

# கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்தில் மது போதையில் பொலிஸார் கடமையில்!

## இருவர் பணி இடைநீக்கப்பட்டனர்

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை நிலையத்தில் பாதுகாப்புக் கடமைக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர், மதுபோதையில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டில் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நள்ளிரவு அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களுடன் முரண்பட்டு கை கலப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை நிலையங்கள் தனித்தனியே இயங்கி வருகின்றன.

தனிமைப்படுத்தல் நிலையம் இராணுவத்தினரின் நிர்வாகத்தின் கீழும் கொரோனா சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கீழும் இயங்குகின்றன.

அங்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் புதன்கிழமை இரவுக் கடமைக்கு என கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து இரண்டு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் மதுபோதையில் நள்ளிரவு 12 மணியளவில் அங்கிருந்த இராணுவத்தினருடன் முரண்பட்டுள்ளனர். அதனால் இராணுவச் சிப்பாய்கள் பொலிஸாரைத் தாக்கியதால் இரு தரப்புக்கும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த நிலையில் மதுபோதையில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறியமை போன்ற குற் றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதற்கான பணிப்புரையை யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வழங்கியுள்ளார்.

# ஒரு கிலோ மஞ்சள் தூள் மன்னாரில் 5 ஆயிரம் ரூபா!

## வாடிக்கையாளர் விசனம்

மன்னார் நகரில் உள்ள சில பல்பொருள் விற்பனை நிலையங்களில் மஞ்சள் தூள் மறைத்து வைத்து நாளுக்கு நாள் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்ற நிலையில், விலை தொடர்பாக உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மன்னார் நகரில் உள்ள சில பல்பொருள் விற்பனை நிலையங்களில் மஞ்சள் தூள் 100 கிராம் 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கு அமைவாக ஒரு கிலோ மஞ்சள் தூள் 4 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை மறைமுகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

நாளுக்கு நாள் விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே மன்னாரில் மஞ்சள் தூளின் விலை கட்டுப்பாடு இன்றி காணப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி கட்டுப்பாட்டு விலையுடன் விற்பனை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக மன்னார் ஊடாக கடத்தி வரப்படுகின்ற மஞ்சள் கட்டிகள் மன்னாரில் உள்ள வர்த்தகர்கள் சிலருக்கு விற்பனை செய்யப்படுகின்றன எனவும், அதனைக் குறைந்த விலைக்குப் பெற்று மஞ்சள் கட்டியை மஞ்சள் தூளாக்கி அதி கூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

# கொழும்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன!

கொழும்பு, நவ.07

கொழும்பு மாவட்டத்தில் 5 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன, சுமார் 20 ஆயிரம் பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 2 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளளர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு உட்பட்ட மேல் மாகாணம் தற்போது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குசட்டத்தின் கீழ் உள்ளது. எதிர்வரும் திங்களன்று ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை அதிகாரிகள் இன்று முடிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு விநியோக சேவைகள் மூலம் அத்தியாவசியப் பொருள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும், முன்னரைப் போலல்லாமல், கொழும்பில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக விநியோக சேவைகளில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் வீட்டு தனிமைப்படுத்தலின் கீழ் வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே தனிமைப்படுத்தப்பட்ட எந்தவொரு குடும்பமும் தங்கள் நிவாரணத்தை பெறவில்லை என்றால், அவர்கள் தினமும் தங்கள் வீட்டை கண்காணிக்கும் காவல் துறை அதிகாரிக்குத் தெரிவிக்கலாம் அல்லது கொழும்பு மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் தொலைபேசி எண் 0112369139 மூலம் தொடர்பு கொள்ளலாம் என்றும் கொழும்பு மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

# ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 32 பேருக்குக் கொரோனாத் தொற்று!

கொழும்பு, நவ.07

கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரை 32 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜி.ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஜி.ஜயசூரிய மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களில் 20 பேர் சிறுவர்கள் எனவும் 12 பேர் கர்ப்பிணிகள் ஆவர்.

மேலும், வைத்தியசாலையில் பணிப்புரிந்த வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஆனாலும் அவர், வைத்தியசாலையில் வைத்து கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

இதேவேளை சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு வருகை தருவோர் குறித்த காரணங்களினால் ஒருபோதும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி யாழ். செயலகத்தில் அரசு நடத்திய கூட்டத்தில் பங்கேற்றவர்களைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

# கைதிகளின் விடயத்தை அரசியலாக்க வேண்டாம்!

## விக்னேஸ்வரன் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அரசியலாக்க வேண்டாமென நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் நீதியமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே சி.வீ.விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சி.வீ.விக்னேஸ்வரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனின் கோரிக்கையை வரவேற்கின்றேன்.

ராஜபக்ஷ குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்பைப் பேணுகின்ற ஒருவரே முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அல்லர். ஆனால் அவரை நாடாளுமன்றத்தில் அமர்த்தியுள்ளனர்.



அவர் கூறுகின்றமை அரசாங்கத்தின் கோரிக்கையாகவும் இருக்கக் கூடும். பல வருடங்களாகச் சிறையில் வாடுகின்றவர்களை விடுதலை செய்து தமிழர்களின் மனங்களைத் தங்களது பக்கம் திருப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் செயற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

இத்தனை வருடங்களாகச்சிறையில்வாழ்க்கையை கழித்த தமிழ் உறவுகள் மற்றும் இளைஞர்களுக்கு இந்த அரசாங்கம் நிச்சயம் எதையாவது செய்யும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

மேலும், சிறைக்கைதிகளின் விடுதலையை அரசியல் மயமாக்கியமையால் தான் இதுவரைகாலமும் எந்தவொரு நன்மையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

கூடிய குற்றங்களை செய்தவர்கள் இன்று வெளியில் திரிவதுடன் செல்வாக்கானவர்களுடன் கூட அவர்கள் தொடர்பில் இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு கீழே மிகவும் அடிமட்டத்தில் இருந்து சிறு குற்றங்களை புரிந்த பலர் 18 வருடங்களுக்கு மேலாக சிறையிலுள்ளனர்.

நாம் கோருவதை விட முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் கோருகின்றமையை அரசாங்கம் செய்யக்கூடும்.

கைதிகளின் விடுதலையையும் அரசியலாக்கி உள்ளமையால், அரசாங்கத்தில் உள்ள ஒருவரை இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி கேட்டு, அவர்களே இதற்குத் தீர்வை வழங்க முனையக்கூடும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை - இந்திய ஒப்பந்தம்...

**(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இதைத் தொடர்ந்து 2013 ஜூன் 08 ஆம் திகதி மற்றுமொரு கலந்துரையாடல் இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. இதுவும் இலங்கையின் அகதிகள் சார்பில் பரந்தன் ராஜன் போன்றோரின் முன்னெடுப்பில் ஒழுங்கு செய்யப்பட்டது.

முன்னையதைப்போல கூட்டமைப்பினரையும் புலம்பெயர் தேசத்து அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் முக்கியமாக B.T.F - T.G.T.E - G.T.F மற்றும் பாரிஸிலிருந்து கிருபாகரன் முதலான உரத்துக் குரல் கொடுத்துவந்தவர்களும் அழைக்கப் பட்டனர்.

இவர்களில் சிலர் இந்தியாவுக்கு முரண்பாடாகவும் புலிகளுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பியிருந்தமையால், தங்களுக்கு விசா வழங்கப்படுமா..? என்ற கேள்வியை எழுப்பினர். அதனைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் உண்டு என்றும் அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் சொல்லப்பட்டது.

இடையில் குறிப்பிட்ட நாளிலிருந்து அதனை இரண்டுவாரங்கள் ஒத்திப்போடுமாறு கூட்டணியினர் கேட்கிறார்கள் என்று சென்னைக்கு பயணம் வந்து சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்தார். இதற்கு இணங்க திகதியும் மாற்றப்பட்டது. குறித்த திகதிகளில் மகாநாடும் நடத்தப்பட்டது.

இவர்களின் வரவும் எதிர்பார்க்கப்பட்டது. B.T.F- - T.G.T.E - G.T.F மற்றும் கிருபாகரனிடமிருந்து, தற்போது தாம் வரவில்லை, பின்னர் வருகிறோம் என்ற கடமைப்பாட்டுத் தகவல் வந்தது.

இச்சந்தர்ப்பத்தில், கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் டெல்லியில் நிற்கிறார்கள் என்று பத்திரிகை நிருபர்கள் முகர்ந்துவிட்டனர். ஆனாலும் அவர்கள் எம்முடன் எந்தத் தொடர்பும் வைக்கவில்லை.

மகாநாட்டில் இந்திய ஒப்பந்தத்தை தமிழ் மக்களின் அபிலாசைப்படி நடைமுறைப்படுத்தவேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றி, அவற்றை இந்திய வெளிவிவகார அமைச்சிடம் கையளிப்பதற்காக நாம் சென்றபோது, எங்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

அதாவது நிருபர்கள் முகர்ந்தவாறு கூட்டமைப்பிலிலிருந்து சிலருடன் சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் வந்து பிரதமருடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடன் எங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை இவர்கள் பாவிக்கிறார்கள். எங்களை வெளிவிவகார அமைச்சரோடு கலந்துரையாடுமாறு கேட்டுக்கொண்டனர்.

அடுத்த நாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எங்களை சந்தித்தபோது, தாங்கள் கூட்டமைப்பினருக்கு, ராஜபக்ஷ காணி, பொலிஸ் அதிகாரம் இல்லாமல் தரவிருக்கும் மாகாண சபைகளை ஏற்றுக்கொள்ளவேண்டாம் என்று வற்புறுத்துகிறோம். ஆயினும், அவர்கள் மாகாண சபைகள் பல காலமாக இயங்காமலேயே இருக்கிறது. அதை தள்ளிப்போடுவதே அரசின் நோக்கம். ஆகவே சபைகளை இயங்கவைக்க தேர்தல் நடத்த நிர்ப்பந்திக்குமாறு அவர்கள் கேட்டதால் , தான் அடுத்த நாள் இலங்கைக்கு புறப்படுவதாக எமக்கு அறிவித்தார்.

நாம் இன்று காண்கின்ற நில ஆக்கிரமிப்புக்கள் இந்தப் பின்னணியில் பதவிகளுக்காக காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்றி ஏற்படுத்தப்பட்ட தேர்தலால் வந்தவைதான். அந்தத் தேர்தல் 2013 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடந்தது.

இதில் நீதியரசர், எல்லோரும் ஒன்றாக சேர்ந்து கேட்டால், தான் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவேன் என்று சொல்லித்தான் போட்டியிட்டு, வெற்றியும் ஈட்டினார்.

ஆனால், தான் உப்புச்சப்பில்லாத ஒரு மாகாண சபையைத்தான் பொறுப்பெடுக்கிறேன் என்பதை அச்சமயத்தில் நீதியரசர் உணர்ந்திருக்கவில்லை. பின்னாளில் அதனால் பெற்ற அனுபவங்களே அவரது விரக்தியின் வெளிப்பாடு.

நான் இலங்கை செல்லும் சந்தர்ப்பங்களில், கூட்டமைப்பினரையும் மற்றும் விடுதலை இயக்கங்களின் அப்போதைய தலைவர்களையும், டக்ளஸ் உட்பட மேலும் சிலரையும் சந்திப்பது வழக்கம். ஆனால், 2015 ஏப்ரில் மாதம் சென்றபோது, நீதியரசர் விக்னேஸ்வரனை மாத்திரம் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவராகவும் வடக்கின் மாகாண சபையின் முதல்வராகவும் சந்தித்தபோது, மிக நீண்ட நேரம் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின்னணி, அதன் அடிப்படை புரிந்துணர்வுகள் – நடந்தவை பற்றியெல்லாம் உரையாடினேன்.

நான் அறிந்தளவில் முதலமைச்சரின் இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றிய புரிந்துணர்வு, தமிழ் மக்களிடையே, மிக வலுவாகவும் ஆழமாகவும் பிரசாரப்பட்ட அடிப்படையின் முனைப்பில்தான் இருந்தது. ஒப்பந்தத்தின் பின்புலத்தை விசாலமான நோக்கில் பார்க்குமாறும் அதனை நாங்கள் நடைமுறைப்படுத்தக்கூடிய செயலூக்கத்தை முன்னெடுக்கவில்லை என்பதையும் விளங்கப்படுத்தினேன்.

இப்படியான அனுபவங்களை ஏற்கனவே நான் பலமுறை சந்தித்திருக்கின்றேன்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கிளிநொச்சி எம்.பி.சிறிதரனை அவர் மெல்பனுக்கு வந்தபொழுது, இங்குள்ள தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு ஒழுங்குசெய்திருந்த ஒரு கூட்டத்தில் சந்தித்தேன்.

அக்கூட்டத்தில் நான் அவரை கேட்ட சில விவரங்களுக்கு, அவரிடம் ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்யும் அரசியல் சித்தாந்தமே இருந்தது. அவர் சற்று விளக்கியபடி, ஒப்பந்தமென்பது அவர் புரிந்துகொண்டவாறு, ராஜீவும் ஜே.ஆரும் தங்களுக்காக தங்களை காப்பாற்ற செய்துகொண்ட ஒன்று. அதில் ஒன்றை ஜே.ஆரும் மற்றதை ராஜீவும் தங்கள் பொக்கட்டில் கொண்டுபோய்விட்டார்கள். அதன்பின்னர் அதில் தமிழருக்கு இருந்ததென்ன..? என்ற அறிவுரையையே அங்கு கூடியோருக்கு வழங்கினார்.

எங்கள் பிரதிநிதிகள் ஆண்டாண்டு காலம் நாடாளுமன்றத்தில் பேசியதினாலோ சர்வதேச சமூகமும் மனித உரிமை ஆர்வலர்களும் தமிழர்களுக்கு நடக்கும் மனித உரிமை மீறல்கள், வஞ்சகங்கள் பற்றி அறிக்கைகள் வெளியிட்டதனாலோ, ஜே.ஆர். ஜெயவர்தனா இந்தியாவுடனான ஒரு ஒப்பந்தத்திற்கு செல்லவில்லை.

அவருக்கு ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் பிரச்சினைக்குத் தீர்வு இந்தியாவின் கையிலேயே என்று தீர்மானமாக சொன்னதனாலும், விடுதலை இயக்கங்கள் உள்நாட்டில் தொடர்ந்து நடத்திய பல தாக்குதல்களை அரசியல் ரீதியாகவும் படைகள் மூலமும் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குத்தள்ளப்பட்டதனாலுமே அவர் அந்த ஒப்பந்தத்திற்கு முன்வந்தார்.

இயக்கங்களின் உக்கிரமான தாக்குதல்களும் அவர்களது அர்ப்பணிப்பும் இல்லாவிட்டால், ஜே.ஆர். அதற்கு முன்வந்தே இருக்கமாட்டார் என்பது நிதர்சனம்.

ஆனாலும், தான் நேரடியாக அவர்களோடு இணக்கத்திற்குப்போகமாட்டேன் என்றும் இந்தியா பின்னணியில் நின்று, அவர்களைத் தூண்டுவதனால்தான், இந்தியாவோடு மாத்திரம் ஒப்பந்தத்திற்கு வருவேன் என்று அடாப்பிடியாக நின்றார்.

எத்தனையோ சுற்றுப்பேச்சுக்கள் விடுதலை இயக்கங்களையும் சேர்த்து திம்புவிலும் பின்னரும் நடந்துவிட்டாலும் புலிகளின் நிலைப்பாடு தாமரை இலையில் தண்ணீர் மாதிரியே இருந்தது.

இரண்டாவது சார்க் மகா நாட்டில் எம். ஜி. ஆரின் ஊடாக நடைபெற்றவையும் தெளிவைத் தரவில்லை. ஜே.ஆரை நம்பமுடியாது என்று பிரபாகரன் சொன்னதிலேயே முடிந்தது.

ஆயின், மேற்கொண்டு புலம்பெயர் நாடுகளிலிருந்து செய்யப்பட்ட உந்துதல்களினால் புலிகளின் பிரதிநிதிகள் சிலர் தமிழ் நாட்டின் 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் ராமை சிங்கப்பூரில் சந்தித்தனர்.

**( தொடரும் )**

## 199 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று!

மேல் மாகாணத்தில் புதிதாக 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொவிட் – 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளதுடன், சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 1,350 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, பொரளை பொலிஸ்நிலையத்தில் 41பொலிஸ் அலுவலர்களுக்கு நேற்றுமுன்தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, பொரளை பொலிஸ் நிலையத்தில் மாத்திரம் இதுவரையில் 56 அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று பதுளை மாவட்டத்தில் மொத்தமாக இதுவரையில் 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. மேலும், அங்கு 2 ஆயிரத்து 193 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 34 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர் என மாவட்ட செயலாளர் எம்.பி.ஆர்.புஸ்பகுமார தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளையில் 31 பேருக்குக் கொரோனா 339 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்!

மாத்தளை மாவட்டத்தில் இதுவரை 31பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் எஸ்.எம்.ஜி.கே.பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள அனைவரும், மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் 339 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிலைவரப்படி, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை ஆறாயிரத்து 623 ஆகக் காணப்படுகின்றது.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 918 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹற்றனில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உலர் உணவுகள் விநியோகம் ஆரம்பம்

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஹற்றன் பகுதியில் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்குத் தேவையான உலர், உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகள் நேற்று (வெள்ளிக்கிழமை) விநியோகிக்கப்பட்டன.

10 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நிவாரணப் பொதிகள், ஹற்றன் வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு கிராம சேவகர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னகுடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

முழுமையான சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் வீடுகளுக்கே சென்று இந்த உணவுப் பொதி கையளிக்கப்பட்டது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் ஆலோசனையின் பிரகாரம், அம்பகமுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நுவரெலியா மாவட்ட உதவிச் செயலாளர், ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கான பொறுப்பதிகாரி, ஹற்றன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட மேலும் சிலர் நிவாரணத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# அமரர் டீ.ஏ.ராஜபக்ஷவின் 53 ஆவது நினைவு பிரதமர் தலைமையில் நேற்று நடைபெற்றது!





அமரர் டீ.ஏ.ராஜபக்ஷவின் 53 ஆவது நினைவு தின நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) தங்காலையில் உள்ள டீ.ஏ.ராஜபக்ஷவின் உருவச்சிலைக்கு அருகில் இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற நினைவு தின நிகழ்வு, கொவிட் - 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் முறையான சுகாதார வழிகாட்டல்களுடன், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களுடன் மிகவும் எளிமையாக இடம்பெற்றது.

தங்காலை பொலொம்மாறுவ புரான வனவாசி குடா விகாரையின் விகாராதிகாரி, தம்மதின்ன மஹா பிரிவெனாவின் பணி அதிகாரியும், ஓய்வு பெற்ற பிரிவெனா உதவியாளரும், கல்வி பணிப்பாளருமான பண்டிதர் மண்டாடுவே தீரானந்த தேரரால் இதன்போது வழிபாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

ரத்மலானை விக்கிந்தாராமய, தங்கல்லை வஜிரகிரி விகாரை, உபய விகாராதிபதி, தென்னிலங்கைக்கான நீதித்துறை சங்கநாயக்கர் பிரிஸ்ஸே தம்மாவங் தேரரினால் பௌத்த அனுசாசனம் நிகழ்த்தப்பட்டது.

நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களான எஸ்.எம்.சந்திரசேன, மஹிந்த அமரவீர மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர ஆகியோரும் அமரர் டீ.ஏ.ராஜபக்ஷவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

தென் மாகாண சபையின் தலைவர் சோமவங் கோதாகொட மற்றும் தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கபில திசாநாயக்க ஆகியோர் அமரர் டீ.ஏ.ராஜபக்ஷவின் உருச்சிலைக்குகுரக்கன்பூக்களிலான மாலையொன்றை அணிவித்தனர்.

# யாழ்.நகரின் மூன்று கடைகள் நேற்று உடைத்துத் திருட்டு!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், நவ.07

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள மூன்று கடைகள் நேற்று அதிகாலைவேளையில் உடைத்து பல லட்சம் ரூபா திருடப்பட்டுள்ளன.

கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு நகை கடை, சைக்கிள் விற்பனை நிலையம் என்பவற்றுடன் ஒருகளஞ்சியமும்இவ்வாறுஉடைக்கப்பட்டுள்ளன.

இரு கடைகளின் மேற்பகுதியைப் பிரித்து உள் இறங்கிய திருடர் கூட்டம் சைக்கிள் விற்பனை நிலையத்தில் நேற்றைய விற்பனைப் பணம் வங்கியில் வைப்புச் செய்வதற்கு தயாராக இருந்த நிலையில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது.

இதேபோன்று நகை கடையின் கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த நகைகள் அயன்சேவில் இருந்தமையால் திருடமுடியாமல் போயுள்ளது. வெளியில் இருந்த கால் பவுண் நகையும் குபேரன் முன்பாக இருந்த ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டுள்ளன.

களஞ்சியத்தின் பின் கதவு உடைக்க முற்பட்ட போதும் எவையும் களவாடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. களவாடப்பட்ட இரு வர்த்தகநிலையங்களிலும் சி.சி.ரி.கமெரா பொருத்தப்பட்டுள்ளபோதும் இரவு மின் இணைப்பை நிறுத்திச் சென்றமையால் அவை பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து தடயவியல் பொலிஸார் சகிதம் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

# இரு குழுக்களுக்கிடையிலான மோதலில் இருவர் படுகாயம்!

**வவுனியாவில் சம்பவம்**

வவுனியா, நவ.07

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு முன்பாக இரு இளைஞர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.40 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வைரவபுளியங்குளம், ஆதி விநாயகர் ஆலயத்துக்கு அருகே அமைந்துள்ள மதுபானசாலையில் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியுள்ளது.

இதன்போது, மதுபானசாலைக்கு முன்பாக வீதியில் மதுபான வெற்றுப் போத்தல்களும் உடைக்கப்பட்டிருந்தன. இதனால் வீதியில் சென்றவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவசர பொலிஸ் சேவைக்கு பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (100)

**கல்யாணமாலை**
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி – 1992.10.28 | பிறந்த திகதி – 1990.06.14 |
| மதம் – பத்தர் | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – அனுசம் 2 | நட்சத்திரம் –சதயம் |
| பாவம் – 24 3/4 | பாவம் – 31 1/2 |
| சூரி/ செவ் – 8 இல் 8 புள்ளி | கல்வி – பட்டதாரி |
| கல்வி – software Engineer | தொழில் – ஆசிரியர் |
| தொழில் – Engineer | எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம். |
| எதிர்பார்ப்பு – பட்டதாரி, அரச தொழில், அழகான பெண். | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# வீதியோர வர்த்தக நடவடிக்கை; வவுனியா நகரில் தடை விதிப்பு





வவுனியா, நவ.07

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டும், வடக்கு மாகாணஆளுநரின்உத்தரவுக்கமையவும் வவுனியா நகர சபையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்குத்தடை விதிப்பதாக நகர சபையால் கடந்த இருதினங்களாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் பொருள்கள் நகர சபையால் பறிமுதல் செய்யப்பட்டன. இதன்படி வீதியோரங்களில் மரக்கறி வகைகள், பன்சிப் பொருள்கள், புடவைகள் உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (100)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir